# பீளமேட்டில் நாய்கள் மர்மச் சாவு; பீதியில் மக்கள்

on 14-09-2012, வெள்ளிக்கிழமை



- நமது நிருபர் -

கோவையில், மர்மமான முறையில், நாய்கள் இறந்து வருவது, பெரும் பீதியை ஏற்படுத்தி உள்ளது.

பீளமேடு 39வது வார்டுக்கு உட்பட்ட பாரதி காலனி பகுதியில், இந்த வாரத்தில், 15க்கும் மேற்பட்ட நாய்கள், மர்மமாக இறந்து கிடந்தன. இங்கு மட்டுமில்லாமல், துரைசாமி லே அவுட், மாசி கவுண்டன் வீதி, ஜெகநாதபுரம், அகிலாண்டேஸ்வரி கோவில் வீதி, கிரியம்மன் வீதி, ரங்கம்மாள் கோவில் வீதி, காந்தி மாநகர் ஆகிய பகுதிகளிலும், நாய்கள் இறந்துள்ளன. கணபதி பகுதியிலும், 20 நாய்களுக்கு மேல் இறந்துள்ளன.

கோவை நகரில், கடந்த வாரத்தில் மட்டும், 50 க்கும் மேற்பட்ட நாய்கள் இறந்துள்ளன. எப்போதும் இல்லாத அளவுக்கு, ஒரே வாரத்தில், இத்தனை நாய்கள் இறந்து போனதற்கான காரணம் தெரியாமல், குழம்பியுள்ளனர். நாய்களை தாக்கும் விபரீதமான நோய் பரவி இருக்கலாம் என, பொதுமக்களிடம் பீதி ஏற்பட்டுள்ளது.

இறந்த நாய்களை மட்டும், அப்புறப்படுத்திய மாநகராட்சி நிர்வாகம், நாய்கள் இறந்ததற்கான காரணம் என்ன என்பது பற்றியும், அது குறித்த முறையான பிரேத பரிசோதனை விபரங்களையும், வெளியிடவில்லை.

பொதுவாக, கோவையில் தெருநாய்கள் மற்றும் வெறிநாய்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இதற்கு காரணம், கோவை நகரப்பகுதியில் உள்ள இறைச்சிக் கடைகளின் கழிவுகள், இரவில், தெருவில் உள்ள குப்பைத்தொட்டிகள் மற்றும் சாக்கடை ஓரங்களில் கொட்டப்படுகிறது.

இதை சாப்பிடுவதற்காக, நாய்கள் அதிகளவில் சுற்றித் திரிகின்றன. இதனால், இரவு நேரத்தில், வீதியில் நடக்கும் பொதுமக்களை கடிப்பது, வாகனங்களில் செல்பவர்களை துரத்துவது போன்ற புகார்கள் எழுந்துள்ளன.

விலங்கு பாதுகாப்புச் சட்டத்திற்கு உட்பட்டு, நாய்களின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்த முறையான நடவடிக்கையை, மாநகராட்சி நிர்வாகம் எடுக்காததால், நாய்கள் அதிகரிக்க காரணம் எனக் கூறப்படுகிறது.

சமீபத்தில் நாய்களின் சாவுக்கு, திருடர்களின் கைவரிசையாக இருக்கலாம் என்றும், ஆந்த்ராக்ஸ் போன்ற நோயாக இருக்கலாம் என்றும், கூறுகின்றனர்.

பாரதி காலனி, துரைசாமி லே அவுட் பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள் கூறியதாவது:



**சேகர்:** பொதுவாகவே இப்பகுதியில், தெரு நாய்களின் எண்ணிக்கை அதிகம். அதோடு, விட்டுக்கு வீடு சொந்தமாக, நாய் வளர்க்கிறனர். ஒன்று, இரண்டு நாய்கள் இறந்து இருந்தால், ஏதோ இயல்பாக இறந்து இருக்கும் என்று நினைக்கலாம்.

ஆனால், 15 நாய்கள் மொத்தமாக இறந்திருக்கின்றன. இதில், என்னோட நாயும் ஒன்று. இது தானே நடந்ததல்ல, யாரோ நாய்களை திட்டமிட்டு கொன்றுள்ளனர். அதற்கு என்ன காரணம் என்பதை,போலீஸ் கண்டுபிடிக்க வேண்டும்.



**நாகராஜ்:** இங்கு, நாய் தொல்லை அதிகம். இரவு நேரத்தில் துாங்க முடியாது. சண்டை போட்டுக் கொண்டே இருக்கும். அதுக்காக இங்கு உள்ளவர்கள் யாரும், நாய்களை கொன்று இருக்க மாட்டார்கள். திருடர்கள் செய்த வேலையாகத் தான் இருக்கும்.



**தனலட்சுமி:** எங்கள் வீட்டிலும், நாய் இருக்கிறது. ராத்திரி நேரத்தில் வீட்டு வாசலில்தான் படுத்திருக்கும். தெரு நாய்கள், கூட சேராது. இந்த நாய்கள், ஏதோ தொற்று நோய் வந்து இறந்து இருக்குமோ என்று, சந்தேகமாக உள்ளது. அந்த நோய், எங்கள் நாய்க்கும் பரவி விடுமோ என்று, பயமாக இருக்கிறது. நாய்க்கு வரும் நோய், அதை வளர்ப்பவர்களுக்கும் வராது என்று, என்ன நிச்சயம்?.



**பொன்னம்மாள்:** நாங்கள் ஆசை, ஆசையாக, பிள்ளை மாதிரி வளர்த்த நாய். ரொம்ப பாசமாக இருக்கும். இந்த தெருவில், யாரையும் கடித்தது இல்லை. யாரோ சாப்பாட்டில் விஷத்தை வைத்து, கொன்று உள்ளனர். இந்த தெருவில் மட்டும், ஆறு நாய்களுக்கு மேல் இறந்திருக்கிறது.



**கதிர்வேல்:** இது திருடர்கள் செய்த வேலைதான். இந்த பகுதியில் நிறைய, 'அப்பார்ட்மென்ட்ஸ்' இருக்கிறது. வசதியானவர்கள் பலர் உள்ளனர் . இந்த ஏரியாவில், பெரிய அளவில் கொள்ளையடிக்க, திட்டம் போட்டிருப்பது தெரிகிறது. அதற்கு இந்த தெரு நாய்கள் தடையாக இருந்திருக்கலாம். அதனால், நாய்களுக்கு விஷம் வைத்து கொன்று இருக்கிறார்கள். இப்பகுதிக்கு இரவில் போலீஸ் ரோந்து அவசியம்.

**மது கணேஷ் (அறங்காவலர்- ஹெச்.ஏ.எஸ்., மிருக நல அமைப்பு):** செல்லப்பிராணிகளில் மனிதர்களோடு நெருக்கமாக, நன்றியோடு பழகக் கூடியது நாய் மட்டும்தான். தெருநாய்கள் தொல்லையை ஒழிக்க, அவற்றை கொல்வது தீர்வாகாது. அது மிகப்பெரிய பாவம், மிருக வதை சட்டத்தின் படி தண்டனைக்குரியது.

நாய்கள் ஆண்டுக்கு, இரண்டு முறை குட்டி போடும் தன்மை உள்ள பிராணி. எட்டு முதல் 10 குட்டிகள் வரை போடும். நாய்களுக்கு, கருத்தடை செய்வதன் மூலம், அதன் எண்ணிக்கையை கட்டுப்படுத்தி விடலாம். மாநகராட்சி முறையாக செய்ய வேண்டும்.

பீளமேடு பகுதியில் உள்ள பல தெரு நாய்களுக்கு, எங்கள் அமைப்பு சார்பில் கருத்தடை செய்து, ரேபிஸ் தடுப்பூசி போட்டு இருக்கிறோம். பல குட்டிகளை எடுத்து, காப்பகத்தில் வளர்த்து வருகிறோம். இனிமேல் இது போன்ற சம்பவம் நடக்காமல், நடவடிக்கை எடுக்க வேண்டும்.



**ஆனந்தகுமார் (சமூக ஆர்வலர்):** செத்து போனது நாய்கள் தானே என்று, மாநகராட்சி நிர்வாகம் அஜாக்கிரதையாக இருக்கக்கூடாது.

நாய்களின் சாவுக்கு, மூல காரணம் என்ன? என்பதை கண்டுபிடித்து மக்களுக்கு தெரிவித்து, அவர்களின் அச்சத்தை போக்க வேண்டும். கோவையை பொருத்தவரை, தெரு நாய்களின் தொல்லை அதிகம். தினமும் வாகனங்களில் அடிபட்டு, அதிக அளவில் நாய்கள் இறக்கின்றன.

இதனால், இரு சக்கர வாகனத்தில் செல்பவர்கள், அதிகம் பாதிக்கப்படுகின்றனர். இதை கட்டுப்படுத்த, நாய்களுக்கு கருத்தடை செய்து, அதன் இனப்பெருக்கத்தை தடுக்க வேண்டும். நாய்களை கொல்லக்கூடாது.

முன்பு மாநகராட்சியில், இதற்கென்று தனி துறையே இருந்தது. இப்போது இருக்கிறதா என்பது தெரியவில்லை.

## 'உணவில் விஷம்'

**பொன்னுசாமி (மாநகராட்சி கமிஷனர்):** பீளமேடு பகுதியில் இறந்த நாய்களை, பிரேத பரிசோதனை செய்ததில், குருணை என்ற விஷம் கலந்த உணவை, நாய்கள் சாப்பிட்டதால் இறந்துள்ளன. இது குறித்து, பீளமேடு போலீசில் புகார் கொடுக்கப்பட்டுள்ளது.

குற்றவாளிகள் யார் என்பதை, போலீசார்தான் கண்டுபிடிக்க வேண்டும். தெரு நாய்களை கட்டுப்படுத்தும் பணிகளை, மாநகராட்சி எப்போதும் போல் செய்து வருகிறது.

## 'தண்டனை நிச்சயம்'



**ராஜேந்திரன் (39வது வார்டு கவுன்சிலர்):** பாரதி காலனி மற்றும் துரைசாமி லே அவுட் பகுதிகளில், தெரு நாய்கள் அதிகம். அதை கட்டுப்படுத்த தேவையான நடவடிக்கையை எடுத்து வருகிறோம்.

யாரோ, நாய்களால் பாதிக்கப்பட்டவர்கள், விஷம் வைத்து கொன்றுள்ளனர். யார் என்று கண்டு பிடிக்கப்பட்டு, நிச்சயம் தண்டிக்கப்படுவர்.

நாய்களை, மாநகராட்சியே கொன்றுள்ளது என்று சொல்வது தவறான தகவல். மாநகராட்சி எப்போதும், அது போன்ற செயலை செய்யாது. நாய்கள் இறந்த பகுதியில், நோய்கள் பரவாமல் தடுக்க, நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.